இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!
களம் -20 வெற்றி -10

# நேர்மை நெறி

அக்டோபர் 2021
(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)
(Reg.No.349/2001)

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்

(NERMAI NERI)

Rs.10

# மன்னன் ஊழல்வாதியானால் மக்களும் அவ்வழியே!



## ஊழல் நாட்டின் சாபம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com
website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

**வணக்கம்.** இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். **எச்சரிக்கை:** அன்பார்ந்த உறுப்பினர்களே, நமது இயக்கம் ஏற்கெனவே பல நிர்வாகிகளை/ உறுப்பினர்களை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்துவிட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. மூன்றாவது அலை இன்று வரும்! நாளை வரும்!! என்று மருத்துவ வல்லுனர்கள் அறிக்கைவிட்டு வரும் நிலையில், ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19 பதுகாப்பு முறையை தவறாமல் கடைபிடித்து தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

**ஊழலின் கோரதாண்டவம்:-**

யாம் சென்ற மே மாத மடலில், தமிழ்நாடு போக்குவரத்து கழகங்களில், 2014ல் வெளியிடப்பட்ட அறிவிப்பானையின் படி நியமிக்கப்பட்ட ஓட்டுனர்கள், நடத்துனர்கள், பணிமனை பணியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் என மொத்தம் சுமார் 1400 பணியாளர்கள் தேர்வில் நடைபெற்ற ஊழலை பற்றித் தெளிவாக எழுதியிருந்தோம். அதன் சாராம்சம் யாதெனில், முன்னாள் போக்குவரத்து அமைச்சரும் தற்போதைய மின்வாரிய அமைச்சருமான, திரு. செந்தில்பாலாஜி அமைச்சர் அவர்கள் லஞ்சம் பெற்றுக்கொண்டு, லஞ்சம் கொடுத்தவர்களை நியக்கப்பட வேண்டியவர்கள் பட்டியல் என ஒன்றை தாமே தயாரித்து அதை அதிகாரிகளுக்கு அளித்ததும், அந்த பட்டியலை அப்படியே தேர்வு செய்ய, அதிகாரிகள், அதாவது, போக்குவரத்துக் கழக மேலண்மை இயக்குனர்கள், லஞ்சத்தில் தமது பங்கை பெற்றுக்கோண்டு, தேர்வில் திறமையானவர்கள் பெற்ற மதிப்பென்களை திருத்தி, குறைத்துக்காட்டியும், லஞ்சம் கொடுத்தவர்களின் மதிப்பெண்களைக் கூட்டிக்காட்டியும், அந்தப் பணியாளர்களைத் தேர்வு செய்துள்ளதாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தான் யாம் 5/2021 நேர்மைநெறியில் எழுதியதன் சாராம்சம். எனவே, இந்த நியமனங்களை ரத்து செய்ய வேண்டும் என்று நீதிப் பேராணைப் பெற WRIT வழக்குகளைப் பாதிக்கபட்டவர்கள் சார்பாக வழக்கறிஞர். என்ற முறையில் மே/ஜூன் மாதங்களில் தாக்கல் செய்திருந்தோம். போலிசாரும், வேறு வழியின்றி,, நீதிமன்ற கட்டளையின் பேரில், உரிய விசாரணை செய்து இளநிலைப்பொறியாளர்கள் தேர்வின்போது நடைபெற்ற ஊழலுக்கு மட்டும் ஒழுங்கான திருத்திய குற்றப்பத்திரிக்கை [முன்னர் குற்றவாளிகளை காப்பாற்றும் விதமாக, தாயிரிக்கப்பட்ட குற்றப்பத்திரிக்கையை திருத்தி] தாக்கல் செய்தனர். இளநிலை பொறியாளர்கள் தவிர்த்த பிற பணியாளர்கள் சம்பந்தமாக திருத்திய குற்றப்பத்திரிக்கைகளை தயார் செய்யும் பணி நடைபெற ஆரம்பித்தது.

**ஆட்சியாளர்களின் கோரதாண்டவம்:-**

இந்நிலையில் தான், “ஊழலை ஒழிப்பேன்! ஊழலற்ற நல்லாட்சி தருவேன்!! என்று மக்களிடம் பிரச்சாரம் செய்து அதன் பேரில் ஓட்டு வாங்கி ஆட்சியை அமைத்தார் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த வாக்குறிதிகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, மேற்கூறிய ஊழலை செய்த திரு.செந்தில் பாலாஜியை தமது அமைச்சரவையில் மின்வாரியத்துறை அமைச்சர் ஆக்கியுள்ளார். அமைச்சர் ஆனவுடன், நீதியையும் நீதித்துறையையும் படுகொலை செய்யும் விதமாக, திறமையாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த போலிஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டனர். திமுக கட்சிக்காரர்கள் அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டனர். தினசரிகளில், கொட்டை எழுத்தில் வெளிவந்த “**செந்தில் பாலாஜி மீதான ஊழல் வழக்கு ரத்து**” என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள். யாமும், இது குறித்து விசாரித்தோம். அது, யாம் தாக்கல் செய்த பொறியாளர்கள் நியமன வழக்குகள் அல்ல என்று அறிந்து வாளாவிருந்தோம், ஏனெனில், நீதித்துறையை ஏமாற்ற முடியாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில்.

**இறைவனின் திருவிளையாடல்/நமக்கு இட்ட கட்டளை:-**

இந்தச் சூழலில் தான், செந்தில்பாலாஜியின் மீதான வழக்குகள் சம்பத்தப்பட்ட போலிஸ் அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் மாற்றப்பட்டனர். புதிய காவல் அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் துணையுடன், மீதியுள்ள வழக்குகளைக் குழிதோண்டி புதைக்க லஞ்சம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரையும், பணத்தால்

சரிகட்டியுள்ளனர். ஓட்டுக்குக் காசு வாங்கும், நமது மக்கள் வேறு எப்படி இருப்பர்? ஊழல் குற்றம் சாட்டியவர்கள் அனைவரும், "நாங்கள் லஞ்சமாக கொடுத்த பணம் திடும்பக்கிடைத்துவிட்டது, எனவே வழக்குகள் வாபஸ் படவேண்டும்" என்று தோரனையில் பிரமாணப்பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். 30.07.2021 அன்று ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மற்ற வழக்குகள் தள்ளுபடி செய்வதற்காக 03.09.2021 அன்று நீதிமன்றம் முன் விசாரணைக்கு வந்தன. இதன் மூலம் **கலிகால நீதியை காலதாமதப்படுதியதை பொறுக்க முடியாமல் ஜெயலலிதாவை, தாமே களத்தில் குதித்து விண்ணுலகம் அனுப்பியது போல, 03.09.2021 அன்று, இறைவன், இன்றைய ஊழலின் கோரதாண்டவத்தைத் தாங்காமல், நீதிபதியின் மனதில் புகுந்து யாம் தாக்கல் செய்த வழக்குகளையும் இந்த வழக்குகளுடன் இணைக்க ஒரு ஆணையை பிறப்பிக்க வைத்துள்ளார். அதன்படி நமது வழக்குகளும் அத்துடன் இணைந்தன. இதன் மூலம் இந்த ஊழலின் ஆழம் அறிய முடிந்தது.**

**<u>களத்தில் நமது இயக்கம்:-</u>**

அதன்பிறகு யாம் விசாரித்த போதுதான், நீதி பரிபாலனத்தின் மேல் மாபெரும் தாக்குக்குதலை தொடுத்துள்ளதும், ஊழல் கோரதாண்டவம் ஆடிவருவதும் தெரிய வந்தது. இது குறித்து இயக்க பொதுச்செயலருடன் விவாதித்தோம். அவர் இந்த அநியாயத்தை எதிர்த்து நடவடிக்கை எடுக்காவிட்டால் இயக்கம் நடத்துவதே அர்த்தமற்றது என்று கூறி உடனே அவசர செயற்குழு ONLINE(வாட்ஸப்) மூலம் கூட்டி ஒப்புதல் பெற்று ஊழலின் இந்த கோரதாண்டவத்தை எதிர்த்து வழக்குத்தொடர தீர்மானித்தோம். அதன்படி, திரு.செந்தில் பாலாஜி மீதுள்ள வழக்குகளை ரத்து செய்யும் விதமாக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னுள்ள நான்கு வழக்குகளிலும் நமது இயக்கத்தையும் ஒரு பிரதிவாதியாக சேர்க்கவேண்டும் என்ற நான்கு மனுக்கள் தாக்கல் செய்தோம். அவை, 08.10.2021 அன்று விசாரணைக்கு வந்தன. திரு.செந்தில்பாலாஜி மீதுள்ள வழக்குகளை ரத்து செய்வதை அன்று தடுத்து விட்டோம். மீண்டும் வழக்குகள் 22.10.2021 அன்று விசாரணைக்கு வருகின்றன. கண்டிப்பாக அன்றைய நாளிலும், நாம் இவ்வழக்குகள் தள்ளுபடி ஆவதை தடுக்க முடியும் என்று நம்புகிறோம். ஏனெனில், தற்போது, நீதிமன்ற விடுமுறையாதலால், வழக்குகள் குறித்த விபரங்களை அலசி ஆராய கால ஆவகாசம் கிடைத்துள்ளது. அலசி ஆராய்ந்ததில் இந்த நாடு சுடுகாடாகி கொண்டிருப்பது நன்கு தெரிகிறது. இதுகாறும், நல்லவர்கள், நேர்மையானர்வள் என்று யாம் [யாம் மட்டுமின்றி, நூற்றுக்கணக்காணோர்] எண்ணிக்கொண்டு இருந்தவவர்களின் சுயரூபங்கள் இவ்வழக்கின் முலம் வெளிவந்துள்ளன. பல கோடி ரூபாய் சொத்து, நேர்மையாளர் என்ற பெயரும், மரியாதையும் இருந்தும், ஊழலின் பக்கம் காசுக்காக நிற்பவர்களை பார்த்து மனம் மிகுந்த வேதனை அடைகிறது. சொல்லொண்ணாத்துயரம் ஏற்படுகிறது. நல்லவேளை, இவர்களை அடையாளம் காட்டியதும் இறைவனின் திருவிளையாடல்தானோ!

**<u>அரசுக்கு வேண்டுகோள்</u>:- உடனடி**யாக செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி மக்கள் நம்பிக்கையை காக்குமாறு இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

**<u>உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்</u>:-**

இன்று இவ்வியக்கம் ஊழலுக்கு எதிரான மிகபெரும் போரில் களம் இறங்கியுள்ளது., உணமையில், இப்போரில் இறைவனால் தள்ளப்பட்டுள்ளது என்பதே உண்மை. நாம், "ஊழலை ஒழிக்க வேண்டும்" என்ற நமது கூப்பாடு உண்மையானதா? இல்லை! நாமும் போலி நாடகம் நடத்துகிறோமா? என்பதை அறிய இறைவன் வைத்ததே இந்த சோதனை. இதில் நாம் வெற்றி பெற வேண்டும். இனி உறுப்பினர்களுக்கும், இயக்கத்திற்கும் பல்வேறு சோதனைகளும், நிர்ப்பந்தங்களும் வரும். எனவே நாம் அனைவரும், பயமின்றி துணிவுடன் அவற்றை எதிர்கொள்ள வேண்டும். சங்கல்பம் எடுத்து உறுப்பினர்க்கான தங்களுக்கு யாம் ஏதும் சொல்லவேண்டியதில்லை. கடைமையை செய்வோம். பலன் நம்மிடம் இல்லை.

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!. நன்றி! வணக்கம்!!.**

அன்புடன்,

(ந.சுப்ரமனியன்)

## *இன்றைய சிந்தனை*
## "நேர்மை ஒரு அரிதான பொக்கிஷம்."*

**V கார்த்திகை ராஜன்**
**பொதுச்செயலாளர்**

இன்று எங்கு பார்த்தாலும் போலிகள், ஊழல்கள், மோசடிகள், எதிலும் பொய் மற்றும் நேர்மை இல்லாத தன்மைப் பெருகி விட்டது.. அமெரிக்காவின் எழுத்தாளர் மேரிலேன்ட் மாகாணத்து ஆளுநருமான ஹிர்ஷ் கோல்ட்பெர்க் "The book of Lies" என்ற புத்தகம் எழுத, இவர் செய்த ஆய்வு இவரை இதற்குத் தூண்டியது.

இந்தப் புத்தகம் எழுத இவர் சுமார் நான்கு வருடங்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் ஒரு நாளைக்கு சுமார் 200 முறை மனிதர்கள் சாதாரணமாக பொய்களை உதிர்க்கிறார்கள் என்று கண்டு அறிந்தார். இந்த நிலை நீடித்தால் பொய் என்பது வாழ்வியல் முறை என்றாகி விடும். நேர்மை என்ற ஒரு கோட்பாடு அழிந்து விடும் என்று அவர் கருதினார்.

நேர்மை என்ற கோட்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமானால், வருடத்தில் ஒரு நாளாவது நேர்மையை நினைவு கூறுவது அவசியம் என்று அவர் கருதினார். இதனால் முட்டாள்கள் தினம் அனுசரிக்கப்படும் ஏப்ரல் மாதத்தின் கடைசி நாள் நேர்மை தினமாக அனுசரிக்கப்பட வேண்டும் என விரும்பினார். இந்த நாளை அனுசரிக்கப் பல ஆலோசனைகளும் கோல்ட்பெர்க் தருகிறார்.

உலகின் மிக மோசமான ஊழல்கள் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, நேர்மை பற்றி உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் என்ன கூறினார்கள் என்று அவரவர் வீட்டில், தெருவில், அலுவலகத்தில் பகிர்ந்து கொள்வது,

இன்று ஒரு நாள் எக்காரணம் கொண்டும் பொய் பேசாமல், நேர்மையாக இருப்பேன் என்று தனக்குத் தானே உறுதிமொழி எடுத்துக் கொள்வது என்று நீண்டு கொண்டே போகிறது அந்தப் பட்டியல். அதே நேரம் நேர்மைப் பற்றி உலகப் பெருந்தகை தன்னுடைய திருக்குறளில் அய்யன் வள்ளுவர் என்ன சொல்கிறார் என்றால்.,

**"கேடும் பெருக்கமும் இல் அல்ல; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி".,**

இதன் கருத்து என்னவென்றால்..,பொருட்செல்வத்தைக் காட்டிலும், நேர்மை தான் சான்றோரின் விலை உயர்ந்த அணிகலன் என்பது. இன்னொரு குறளில்.. "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும தீமை இலாத சொலல்."

**மற்றவரை வருத்தப்படுதாத எந்தச் சொல்லும் வாய்மையாகக் கருதப்படும்.**

*நாம் சொல்லும் சொல் , நாம் பயணிக்கும் பாதை நேர்மையாக இருந்தால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்...*

***வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான்***

***உண்மையும் நேர்மையும் நம்மைப் பாதுகாக்கும், நேர்மை ஒரு போதும் வீண் போகாது.***

***நேர்மையை விதையுங்கள்..***

**,* பதவியும் பணமும் உங்களை நாடி தேடி வரும்...***

## நேர்மையான மனிதன்

விடியும் பொழுதை அழகாக்குவதும் அற்புதமாக்குவதும்.. நம் கையிலே இருக்கிறது..அது தான் தன்னம்பிக்கை! "***நேர்மையான மனிதன்***"_ _*என்கிற வார்த்தைக்கு* இந்த சிறு கதையை படியுங்கள்.

*உச்சிவெயில் மண்டையை பிளந்து கொண்டிருந்த்து.* வாசலில் அமர்ந்து நியுஸ் பேப்பர் வாசித்து கொண்டிருந்த மணிவாசகம் காம்பவுண்ட் கேட் திறக்கும் ஓசை கேட்டு நிமிர்ந்தார். கேட்டை திறந்தபடி ஒரு 50ஐ கடந்த நபர் நின்றிருந்தார். அழுக்கு சட்டை, எண்ணெய் காணாத தலை, கிழிசல் லுங்கி அணிந்திருந்த அவர் சிநேகமாய் சிரித்தவாறே ஐயா, பழைய நியுஸ் பேப்பர் எடுக்கறேங்க! அம்மா வரச் சொல்லி இருந்தாங்க என்றார்.

ஊம். என்ற மணிவாசகம்,"என்ன விலைக்கு எடுத்துக்கறே?"

"இங்கிலீஷ் பேப்பர்னா 12 ரூபா கிலோ! தமிழ்னா பத்து ரூபாங்க!"

"ரொம்ப கம்மியா யிருக்கே!"

"இல்லீங்க போனமாசம் 10 ரூபா 8 ரூபாதான் எடுத்தேங்க! இப்ப ரெண்டு ரூபா கூடியிருக்கு!"

'ஒரு மாசம் பேப்பர் பில் எவ்வளவு தெரியுமா?"

"நமக்கெதுக்குங்க அதெல்லாம்?"

"230 ரூபா சில சமயம் 250 கூட! ஆனா ஒரு மாசம் பழைய பேப்பரை வித்தா பத்து ரூபாதான் கிடைக்குது..!"

"வேஸ்ட் பேப்பர்தானுங்களே? இதை கொண்டு போய் கடையில போட்டா எங்களுக்கு கிலோவுக்கு ஒரு ரூபா கிடைக்கும் அவ்வளவுதான்!"

"சரி சரி உள்ளே வா வீடே ஒரே நியுஸ் பேப்பர் அடைசலா இருக்குன்னு எம்பொண்டாட்டி கத்திக்கிட்டிருந்தா அதான் வர சொல்லியிருக்கா. எடையெல்லாம் ஒழுங்கா போடுவே இல்லே!"

"கரெக்டா இருக்கும் சார்!"

அந்த மனிதர் பழைய இரும்புத்தராசுடன் உள்ளே நுழைய "லட்சுமி! பழைய பேப்பர் எடுக்க வந்திருக்காங்க சீக்கிரம் வா!"

"நான் கொஞ்சம் அடுப்படியிலே வேலையா இருக்கேன். நீங்களே எடுத்துப் போடக்கூடாதா?" "அப்ப திருப்பி அனுப்பிச்சரவா?"

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம் நானே வந்து எடுத்து போட்டுத் தொலைக்கிறேன்."

லட்சுமி முணுமுணுத்தபடி கிச்சனில் இருந்து வந்து ஹாலில் கப்போர்டில் கிடந்த பேப்பர்களை அள்ளி வராந்தாவில் போட்டாள்.

சிதறிக்கிடந்த பேப்பர்களை அடுக்க ஆரம்பித்தார் அந்த பெரியவர்.

"அப்படியே ஒரு கயிரு போட்டு கட்டி வைச்சிருந்தா எடை போட சுலபமா இருந்திருக்கும்யா!" "ஏன் நீ கயிறு கொண்டு வர மாட்டியா? "

"இருக்குய்யா ! வண்டியிலே இருக்கு! போய் கொண்டு வரனும்!"

" போய் கொண்டு வா!"

"அந்த பெரியவர் எழுந்தார்.

ரொம்ப தாகமா இருக்குய்யா! குடிக்க கொஞ்சம் தண்ணீ கிடைக்குமா?"

"கேட்டு ஓரமா ஒரு பைப் இருக்கு பாரு! அதுலே பிடிச்சு குடிச்சுட்டு போய் கயிறு கொண்டுவா!"

பெரியவர் எழுந்து போய் அந்த குழாயை திருகினார். வெயிலில் சுடுதண்ணீராய் கையில் விழுந்த நீரை கொஞ்சம் கீழே விட்டு முகம் கழுவி பின்னர் இரண்டு கை பிடித்து அருந்தினார். முகத்தை தோளில் போட்டிருந்த அழுக்குத்துண்டால் துடைத்துக்கொன்டு வெளியே நிறுத்தியிருந்த அந்த மூன்று சக்கர (tri-cycle) சைக்கிளை உள்ளே தள்ளிக் கொண்டு வந்தார்.

"கயிரை எடுத்து வான்னு சொன்னா வண்டியையே கொண்டு வந்திட்டியே?" மணிவாசகம் கேட்க

"பேப்பர் நிறைய இருக்குதுய்யா! அதான் எடை போட்டதும் வண்டியிலே எடுத்து போக சவுகரியமா இருக்கும்னு கொண்டு வந்தேன்."

"சரி பெரியவரே! உங்க பேரு என்ன?"

"முத்து"

"எத்தனை வருஷமா இந்த தொழில் பண்றீங்க?"

"அது ஆகிப்போச்சுங்க முப்பது வருஷம்!"

"ஒருநாளைக்கு எவ்வளோ கிடைக்கும்.?"

"அது வியாபாரத்தை பொருத்துங்க! வீடுங்கள்லே வேண்டாம்னு எவ்வளோ தூக்கி போடறீங்களோ அவ்வளவும் எங்களுக்கு சோறூ போடற தெய்வங்கள்!"

பேசிக்கொண்டே இருந்தாலும் பெரியவர் முத்து பேப்பர்களை இரண்டு மூன்று அடுக்குகளாக அடுக்கி கட்டினார். அப்புறம் எடை போட ஆரம்பித்தார். இரண்டு கிலோ எடைக்கல் ஒன்றும் ஒருகிலோ எடைக்கல் ஒன்றையும் சேர்த்து தராசில் வைத்து மறுபக்கம் பேப்பர்களை வைத்தார்.

தூக்க முடியாமல் தராசை தூக்கி நிறுத்த முள் பேப்பர் இருந்த பக்கம் தாழ்ந்தது. கொஞ்சம் பேப்பர்களை எடுத்துவிட்டு மீண்டும் நிறுத்தார்.

இதற்குள் வார இதழ்கள் சில நாவல் புத்தகங்கலையும் என் மகன் படித்து முடித்த கல்லூரி பாடப் புத்தகங்களையும் கொண்டுவந்து போட்டாள் லட்சுமி.

" பேப்பர் வரைக்கு 5 எடை இருக்குய்யா! அஞ்சு மூணு 15 கிலோ.

"புக் எல்லாம் எட்டு கிலோ இருக்கு மொத்தம் 23 கிலோ.

பேப்பருக்கு 150 ரூபா. புக்கு கிலோ பன்னெண்டு ரூபா அப்போ தொண்ணூத்தாறூ ரூபா. மொத்தம் எரநூத்து நாப்பத்தாறு ரூபா " என்றவர்

"ஐயா, எதாவது தக்காளி வெங்காயம் வேணுங்களா?"

"உன் அழுகின தக்காளி யாருக்கு வேணும்? பணத்தை கொடுத்திட்டு பேப்பரை எடுத்துட்டு கிளம்பு."

"ஐயா, அம்பது ரூபா கம்மியா இருக்கு! அதுக்கு எதாவது வெங்காயம் தக்காளி வாங்கிக்குங்க!"

"அதானே பாத்தேன். இப்படி எதையாவது சொல்லி அழுகுன தக்காளியை தலையிலே கட்டப் பாக்கறீயா?"

"இல்லே சார். இன்னைக்கு காலையிலே மார்க்கெட்ல எடுத்த புது தக்காளி நீங்களே பொறுக்கி எடுத்துக்கங்க! ரெண்டரை கிலோ ஐம்பது ரூபா"

"மார்க்கெட்ல தக்காளி கிலோ பாஞ்சு ரூபாதான்!"

"அது நேத்து ரேட்டுங்கய்யா! இன்னிக்கு கிலோ இருபது ரூபாதான்! உங்களுக்கா வேனும்னா மூணு கிலோ போடறேன்"

"யாருக்கு வேணும் உன் பிச்சை! ரூபா இருந்தா கொடுத்துட்டு பேப்பரை எடுத்துக்கோ. இல்லேன்னா கிளம்பு. நாங்க வேற ஆளுக்கு போட்டுக்கறோம்!"

" முத போணி ஐயா! காலையிலே இருந்து வெயில்ல சுத்திட்டு வரேன்! கடைக்கு இன்னும் அஞ்சு கிலோ மீட்டர் போகணும் "

"அதுக்கு"

"இரு நூரு ரூபா இப்ப வாங்கிடுங்க! மிச்சம் ஐம்பது ரூபா நாளக்கி வரும்போது கொடுத்துடறேன்!"
"முழுசா அம்பது ரூபாயை ஆட்டையை போட பாக்கிறீயே?"

"அப்படியெல்லாம் பண்ண மாட்டேன்யா! இந்த ஏரியாவுலேதான் முப்பது வருஷமா வியாபாரம் பண்ணிகிட்டு இருக்கேன். உங்க துட்டு எனக்கு வேண்டாம்யா! ஏமாத்தி துண்ணா உடம்புலே ஒட்டாதுய்யா! நாளைக்கு கண்டிப்பா கொண்டு வந்து கொடுத்துடறேன்யா!"

"அப்ப ஒண்ணு பண்ணு இருநூரு ரூபாவுக்கு எவ்வளோ பேப்பரோ அதை மட்டும் எடுத்துட்டு போ! நாளக்கி வரும்போது மீதி பணம் கொடுத்திட்டு மிச்சத்தை எடுத்துப்போ" கறாராக சொன்னார் மணி வாசகம்.

இனி பேசி பிரயோசனம் இல்லை என்று அவர் சொன்னபடி இருநூறு ரூபாயை கொடுத்துவிட்டு பேப்பர் பதினைந்து கிலோவையும் நாலு கிலோ எடை புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு கிளம்பினார் முத்து.

"'பாவங்க அந்தாளு! இப்படி பச்சாதாபமே இல்லாம விரட்டறீங்க! அந்த அம்பது ரூபாவை அவன் ஏமாத்த மாட்டான். அப்படியே ஏமாத்தினாலும் நாம கொறைஞ்சா போயிருவோம்."

"ஏன் பேச மாட்டே? ஒவ்வொரு ரூபாவும் நான் உழைச்சு சம்பாதிச்சு இந்த அளவுக்கு வந்திருக்கேன். யாருகிட்டேயும் நான் ஏமாறத் தயாரா இல்லே! அவன் நாளக்கி வர மாட்டான் பாரு. இந்த மாதிரி எத்தனை பேரை நான் எடை போட்டு வைச்சிருக்கேன் தெரியுமா? அந்த ஓட்டை தராசுலே எடை போட்டா எப்படியும் கிலோவுக்கு நூறு கிராம் லாபம் கிடைக்கும். நம்மகிட்டே பத்து ரூபாய்க்கு எடுத்து பன்னென்டு ரூபாவுக்கு விப்பான். ஏமாந்தா எடையிலே இன்னும் கொள்ளையடிப்பான்.

"இப்படி ஒரு ரூபா ரெண்டு ரூபா லாபம் வரலைன்னா அவன் தொழில் செஞ்சு பிரயோசனம் இல்லாம போயிருங்க! அவன் வயித்து பொழைப்ப பாக்க வேணாம்.

"சரிசரி! அவனாலே நமக்குள்ளே எதுக்கு பிரச்சனை? ஆக வேண்டிய வேலையைப் பாரு" என்று மனைவியை அடக்கினார் மணிவாசகம்.

மறுநாள் மணி வாசகம் சொன்னபடி முத்து வரவில்லை! பொழுது சாய்ந்துவிட்ட்து.

“பார்த்தியா! நான் சொல்லை! அவன் வர மாட்டான்னு!” என்று அமர்த்தலாக சொன்னார்.

”இன்னிக்கு வேற லைன்ல போயிருப்பார். நாளைக்கு வருவார்னு நினைக்கிறேன்.”

”உன் நினைப்பை காயப்போடு. நமக்கு நாலு கிலோ பேப்பர் மிச்சம் ஆச்சு! இல்லேன்னா அம்பது ரூபா நஷ்டம் ஆகியிருக்கும்”.

லட்சுமி தலையில் அடித்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

மறுநாள் அதிகாலை வேலையிலேயே கேட் கதவு திறக்கவும் செடிகளுக்கு நீர் விட்டுக்கொண்டிருந்த மணி வாசகம் அப்படியே போட்டுவிட்டு கவனித்தார்.

முத்து உள்ளே நுழையவும் தன் கணிப்பு பொய்யாகி விட்ட்தே என்ற வருத்தமுடன் ”என்னய்யா! அம்பது ரூபா கொண்டு வந்துட்டியா?”

”இல்லீங்கய்யா. நான் வந்தது”

”தான் நினைத்தது சரிதான் என்று உள்ளுக்குள் பெருமிதப்பட்டு கொண்டு அம்பது ரூபா இல்லாம பேப்பர் போட முடியாது என்றார்.

”சரிங்கய்யா! நான் அம்பது ரூபா கொடுத்திட்டே பேப்பர் எடுத்துக்கறேன் .ஆனா”
”என்னய்யா ஆனா?”

”முந்தா நாள் நீங்க போட்ட புக்ஸ்களை எடுத்துட்டு போனேன். அதுல சில பாட புஸ்தகமும் இருந்தது. அதை கடையிலே போடறதை விட பழைய புத்தக கடையில கொடுத்தா கொஞ்சம் ரூபா அதிகம் கிடைக்கும்னு தனியா எடுத்து வைச்சேன். பேப்பரை மட்டும் கடையிலே போட்டுட்டு வீட்டுக்கு போய் புக்ஸ்களை புரட்டினேன். அப்ப அதிலே இந்த காசு இருந்துச்சுய்யா? என்று இரண்டு ஐநூறு ரூபா நோட்டுக்களை நீட்டினார் முத்து.

மணிவாசகம் அதிர்ந்து போனார். ஐம்பது ரூபாயை நம்பாத நான் எங்கே ஆயிரம் ரூபாயை அதுவும் எப்போதோ வைத்து நான் மறந்து போன அந்த ரூபாயை திருப்பி தரும் முத்து எங்கே? மிகவும் எடையில் மிகவும் தாழ்ந்து போய் விட்டோமே என்று வருத்தம் அவர் முகத்தில் அப்பட்டமாய் தெரிந்தது.

மனம் தெளிவடைந்தவராய் ”பெரியவரே! புத்தகத்தை எடைக்கு போட்டப்புறம் அது உங்களுக்குத்தான் சொந்தம். அதுலே பணம் இருந்தாலும் அது உங்களோடதுதான். நீங்களே வச்சுக்கங்க!”

“நீங்க பெரிய மனசோட இந்த பணத்தை கொடுத்தாலும் உழைக்காம இவ்வளோ பணம் கிடைச்சா அப்புறம் அது என் மனசை மாத்திடும். இதே மாதிரி தினமும் கிடைக்காதான்னு ஏங்க வைக்கும். அப்புறம் என் நேர்மையை கொன்னுடும். வேணாங்கய்யா! இதை நீங்களே வச்சிக்குங்க! ”என்று மணிவாசகம் கையில் ரூபாயை திணித்துவிட்டு கிளம்பினார் முத்து.

”பெரியவரே ஒரு நிமிஷம்! நேத்து எடை போட்டு வைச்ச புத்தகத்தையாவது எடுத்துட்டு போங்க!”

_*”அம்பது ரூபா கிடைச்சதும் கண்டிப்பா வரேன்!

**”சொல்லிவிட்டு அவர் நடக்க அப்படியே உறைந்து போய் நின்றார் மணிவாசகம்.***

## NEET தேர்வு பற்றி முனைவர் டி. பெரியசாமி (IIT சென்னை) அவர்களின் தெளிவான கருத்துகள்:-

1. தமிழ்நாட்டின் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும் பட்ஜெட் சுமார் 28000 கோடி. அதில் 60% க்கும் மேல் பள்ளிக்கல்விக்கு ஒதுக்கப்படுகிறது.

2. நுழைவு தேர்வு ரத்துசெய்யப்பட்ட பிறகு நீட் தேர்வு வருவதற்கு முன்னால் 2006 முதல் 2016 வரை தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அரசு கல்லூரி மருத்துவ இடங்கள்(MBBS) -29925.

3. இந்த 29925 இடங்களில் அரசுப்பள்ளிகளில் படித்து MBBS இடங்கள் வாங்கியவர்கள் 213. சராசரியாக ஆண்டிற்கு 19 மாணவர்கள் மட்டுமே. அரசு பள்ளியில் இருந்து மருத்துவ படிப்பிற்கு தேர்வானார்கள். இது 0.7% சதவிகிதத்திற்கும் குறைவானதாகும்.

4. **NCERT** எனப்படும் 1961 ம் ஆண்டு மத்திய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு மத்திய மாநில அரசாங்கங்களுக்கு பாடத்திட்டத்தில் உதவி செய்வதற்காக மாதிரி பாடப்புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள். அந்த பாடப்புத்தகத்தில் இருந்து **Medical council of India (MCI) நீட் தேர்விற்க்கான syllabus ஐ வடிவமைத்துள்ளார்கள்.**

5. **NCERT** பாடப்புத்தகங்களை **CBSE** அப்படியே எடுத்துக் கொண்டுள்ளார்கள். ஆந்திரா போன்ற சில மாநிலங்கள் **NCERT** பாடப்புத்தகத்தை மேலும் மெருகேற்றி அவர்களின் மாநில பாடப்புத்தகங்களை வடிவமைத்தார்கள் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் அதை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைத்தார்கள்.

6. எனவே நீட் தேர்வு பாடத்திட்டம் **NCERT** படத்திட்டத்திலிருந்து MCI ஆல் எடுக்கப்பட்ட பாடத்திட்டமாகும். நீட் தேர்வு **CBSE** பாடத்திட்டத்தில் நடத்தப்படுவதில்லை.

7. நீட் தேர்வில் 11 மற்றும் 12ம் வகுப்பு பாடத்திட்டத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். கேள்விகள் அறிவாற்றல் திறனின் (Cognitive skills) முதல் மூன்று திறன்களை **(Remembering, understanding & Application)** சோதிக்கும் விதத்தில் இருக்கும்.

8. இந்த மூன்று திறன்கள் பள்ளிக்கல்வியில் வளர்ந்தால்தான் மீதமுள்ள திறன்களை **(Analysis, synthesis and creativity)** கல்லூரி கல்வியில் வளர்க்க முடியும் இந்த அறிவாற்றல் திறனின் மேல்திறன் **(creativity)** புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்கும் திறனாகும்.

9. தமிழ்நாட்டில் **Blue print** எனப்படும் எந்த கேள்விக்கு எந்த பாடத்தில் எந்த பக்கத்தில் இருந்து கேள்வி கேட்க வேண்டும் என்ற தேர்வுமுறை 2017 வரை அமலில் இருந்தது. இந்த தேர்வுமுறை மாணவர்களின் அறிவாற்றலை சோதிக்காமல் மனப்பாடம் செய்யும் முறையை ஊக்குவிக்கும் விதத்தில் இருந்தது. இது கிட்டத்தட்ட தேர்விற்கு முன்னரே Question paper ஐ out செய்வதற்கு ஒப்பானதாகும். இந்த தேர்வுமுறையில் மாணவர்கள் சில பாடங்களை படிக்காமலேயே முழு மதிப்பெண் எடுக்க முடியும். இதுகூட 12ம் வகுப்பு பாடம் மட்டும்தான். 11ம் வகுப்பு பாடங்கள் 99% பள்ளிகளில் நடத்தப்படவே இல்லை.

10. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவாறு தமிழ்நாட்டில் தான் ஆசிரியர்கள் பாடத்திட்டதை குறைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள்.

11. தமிழ்நாட்டின் பாடத்திட்டம் 12 ஆண்டுகளுக்கு பிறகு 2017 ம் ஆண்டுதான் மாற்றப்பட்டது. 2018ம் ஆண்டிலிருந்து Buleprint தேர்வுமுறை ஒழிக்கப்பட்டது. கேள்விகள் சிறிது அறிவாற்றல் திறனை

சோதிக்கும் விதத்தில் கேட்கப்பட்டன. 2020ம் ஆண்டில் நம் மாணவர்களின் 12ம் வகுப்பு தேர்ச்சி 93%. ஆனால் அந்த 93% ல் 50% மாணவர்கள் வெறும் தேர்ச்சி மதிப்பெண்(pass mark) மற்றும்தான் பெற்றுள்ளார்கள்.

12. நீட் தேர்வானது 2013ம் ஆண்டு அப்போதைய மத்திய அரசால் கொண்டுவரப்பட்டு நீதிமன்ற தடைகளை கடந்து 2016ம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. 2016ம் ஆண்டு மாநில அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு 2017ம் ஆண்டு முதல் இந்தியாவில் உள்ள அனைத்து மருத்துவ இடங்களுக்கும் நீட் மூலமாக மட்டுமே சேர்க்கை நடத்தப்படும் என்று ஒரு ஆண்டிற்கு முன்னரே அறிவிக்கப்பட்டது. நீட் தேர்வு வருவதன்முலம் இடஒதுக்கீடோ அல்லது சொந்த மாநிலத்தில் உள்ள எந்த ஒதுக்கீடும் பாதிக்கப்படாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாநில அரசுகள் அவர்களின் மாநில கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை வழக்கம் போல் நடத்தலாம். ஆனால் சேர்க்கை நீட் தேர்வு மூலம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதாவது தமிழத்தின் அரசு கல்லூரிகளில் உள்ள 85% சதவிகித இடங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மட்டும் 69% இடஒதுக்கீட்டுடன் கொடுக்கப்பட வேண்டும் என்று முடிவாகியது. இது நீட் தேர்வு வருவதற்கு முன்னிருந்த அதே நிலையாகும்.

**இப்பொழுது மனதில் எழும் சிலகேள்விகளை கேட்க விரும்புகிறேன்.**

1. தமிழ்நாட்டில் அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவ இடத்தில் சேர முடியாமல் போனதற்கு நீட் தேர்வு மட்டும்தான் காரணமா? 28000 கோடி ரூபாய் பணம் வெறும் 19 மாணவர்களை மருத்துவ படிப்பில் சேருவதற்குத்தான் உபயோகிக்கப்பட்டதா??

2. திறமைவாய்ந்த ஆசிரியர்கள் அரசுப்பள்ளியில் உள்ளபொழுது அவர்களை விட திறமை குறைந்த தனியார் பள்ளி ஆசிரியர்களால் result எப்படி கொடுக்க முடிந்தது? இது அரசின் தோல்வியா??? அரசு பள்ளி ஆசிரியர்களின் தோல்வியா???

3. வெறும் 19 மாணவர்கள் மட்டுமே மருத்துவப்படிப்பிற்கு சென்ற பொழுது நடைபெறாத போராட்டங்கள் நீட் தேர்வை எதிர்த்து மட்டும் நடப்பதன் காரணம் என்ன??

4. NCERT பாடத்திட்டத்தை குறைத்து, தகுதி குறைந்த பாடத்திட்டத்தை தமிழ்நாட்டில் வைத்ததற்கு யார் பொறுப்பேற்பது???

5. 12 வருடங்களாக ஏன் பாடத்திட்டம் தமிழ்நாட்டில் மாற்றப்படவில்லை? Blue print எனப்படும் மோசமான தேர்வுமுறை ஏன் மாற்றப்படவில்லை?

6. ஏன் அரசுப்பள்ளிகளின் தரத்தை எதிர்த்து போராட்டங்கள் நடைபெறவில்லை?? 28000 கோடி மக்களின் வரிப்பணம் வீணாக்கப்பட்ட பொழுது ஏன் போராட்டங்கள் நடைபெறவில்லை?

7. 11ம் வகுப்பு பாடத்தையே கற்று தராமல் மாணவர்களால் எப்படி நீட் தேர்வு எழுத முடியும்? 11ம் வகுப்பு பாடங்கள் கற்றுத்தரப்படாமல் போனதற்கு நாமும் நமது ஆசிரியர்களும் காரணமாக இருந்துகொண்டு நீட் தேர்வின் மேல் பழி போடுவது எவ்வகையில் நியாயம்? அவ்வாறு கற்றுத்தரப்படாமல் போனதற்கு ஏன் இங்கு யாரும் போராடவில்லை? இங்கு ஆசிரியர்களின் வசதிக்காக பாடத்திட்டத்தை குறைத்துவிட்டு எங்களுக்கு வேறு பாடத்திட்டத்தில் இருந்து கேள்வி வந்தது என்று கேள்வி எழுப்புவது எந்த வகையில் நியாயம்?

8. ஒவ்வொரு ஆண்டும் மாநில பாடத்திட்ட தேர்வு முடிவுகள் வரும்பொழுது குறைந்தது 5 மாணவர்களின் தற்கொலை செய்தியை கடக்க நேரிடுகிறது. மிகவும் வருத்தமான விஷயம். ஆனால் நாம் மாணவர்களின் குறைகளை களைந்து அவர்களுக்கு மன உறுதி கொடுக்க வேண்டுமா? அல்லது அவர்களின் தற்கொலையை காரணம் காட்டி தேர்வை ரத்து செய்ய வேண்டுமா?

9. அனிதாவின் மரணம் என்னை மிகவும் பதித்த ஒரு விஷயம் அந்த குழந்தையின் மரணத்தை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. தெளிவு பெறுவதற்க்காக சில விஷயங்களை நாம் இதில் விவாதிக்க வேண்டியுள்ளது.

(i) **முதலில் அனிதா** அரசுப்பள்ளியில் படிக்கவில்லை
(ii) பெரம்பலூர் மாவட்டத்தில் மேலமாத்தூரில் உள்ள தனியார் பள்ளியில் படித்தார்
(iii) தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான பள்ளிகள் போல் அங்கும் 11ம் வகுப்பு பாடங்கள் நடத்தப்படவில்லை
(iv) 2016ம் ஆண்டே அடுத்த வருடம் நீட் தேர்வின் மூலம்தான் சேர்க்கை நடக்கும் என்று மத்திய அரசாங்கமும் உச்ச நீதிமன்றமும் அறிவித்த நிலையில் அதை சரியாக மாணவர்களுக்கு கொண்டு செல்லாதது யார் தவறு?
(v) அனிதாவுக்கு தவறான நம்பிக்கையை கொடுத்தது யார்? 11ம் வகுப்பில் 50% கேள்விகள் கேட்கப்படும் நிலையில் 11ம் வகுப்பு பாடத்தையே படிக்காமல் அவரால் எப்படி நீட் தேர்வில் மதிப்பெண் பெற முடியும்? 11ம் வகுப்பு பாடத்தை அவருக்கு கற்றுத்தராமல் போனதற்கு ஆசிரியர்கள் காரணமா? அரசாங்கம் காரணமா?
(vi) நீட் 2017 தேர்விற்கு அவர் 2016ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே விண்ணப்பம் செய்திருக்க வேண்டும். அந்த விண்ணபத்தில் மிகத்தெளிவாக அனைத்து மருத்துவ கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை நீட் மூலமாகத்தான் நடக்கும் என்று குறிப்பிட்டிருந்த நிலையில் அந்த தகவலை அவருக்கு உறுதியாக தெரிவிக்காதது யார் தவறு?
vii) அந்த விண்ணபத்தில் நீட் தேர்வில் இப்படித்தான் கேள்விகள் கேட்கப்படும் என்று அறிவித்திருந்த நிலையில் அதை அவருக்கு கற்றுக்கொடுக்காதது யார் தவறு?? நீட் தேர்வை எத்தனை முறை வேண்டுமென்றாலும் 25 வயதிற்குள் எழுதலாம் என்ற வாய்ப்புள்ள பொழுது அவருக்கு நம்பிக்கையை கொடுத்து மீண்டும் படிக்க வைக்காதது யார் தவறு? அவரை உச்ச நீதிமன்றம் அழைத்து சென்ற செலவில் 10ல் 1 மடங்கு செலவு செய்திருந்தால் அவரை மீண்டும் படிக்க வைத்து மருத்துவராக்கி இருக்கலாமே? அதைச் செய்யாதது யார் தவறு?
(viii) இப்படி அனைத்து தரப்பிலும் தவறு உள்ள பொழுது நீட் தேர்வின் மீது மட்டும் பழிபோட்டு மாணவர்களுக்கு அந்த தேர்வின் மீது வெறுப்பு வருமாறு செய்வது எந்த வகையில் நியாயம்?

10. நீட் வந்த பிறகும் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக்கல்லூரிகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் மட்டுமே சேரமுடியும் என்ற நிலை மட்டுமே உள்ளது. நான் தமிழ்நாட்டை சார்ந்தவன் என்று தமிழ்நாட்டு அதிகாரிகளின் உதவியுடன் சான்றிதழ் பொய்யாக வாங்கி வந்தால் ஒருவேளை அடுத்த மாநில மாணவர்கள் சேரலாம்.

11. “நீயா நானா கோபிநாத்” முதல் “கரு பழனியப்பன்” வரை அனைவரும் நீட் தேர்வு எங்கள் தமிழ்நாட்டு மாணவர்களை மருத்துவ படிப்பு படிக்க விடாமல் செய்வதற்காக கொண்டுவரப்பட்டது என்று பொய் பிரச்சாரம் செய்வது நியாமா? ஏன் பொய்யான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கிறீர்கள்? இப்படி பொய்யான தகவல்களை கூறினால் மக்கள் இந்த தேர்வை எழுதாமல் போனால் யாருக்கு பாதிப்பு?

12. அடுத்ததாக நீட் மூலம் சமூகநீதி மறுக்கப்பட்டதாக அனைவரும் மேடைக்கு மேடை ஏன் பொய் பேசுகிறார்கள்? இங்கு சென்ற வருட (2019) தமிழ்நாட்டு MBBS மாணவர் சேர்க்கை தரவுகளை தோராயமாக கொடுத்துள்ளேன்.

a) மொத்த தமிழ்நாட்டு அரசு கல்லூரி மாநில இடங்கள் -3050

b) பொது பிரிவிற்கு (open category) ஒதுக்கப்பட்ட இடங்கள் -945
(i) பொதுப்பிரிவில் BC மாணவர்கள் எடுத்த இடங்கள்- 679
(ii) பொதுப்பிரிவில் MBC மாணவர்கள் எடுத்த இடங்கள்- 110

(iii) பொதுப்பிரிவில் SC மாணவர்கள் எடுத்த இடங்கள் -20

(iv) பொதுப்பிரிவில் FC (Forward caste) மாணவர்கள் எடுத்த இடங்கள் வெறும் 136 மட்டுமே. (இந்த 136 இடங்களில் பிராமணரை தவிர வேறு சாதிகளும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.)

c) பிற்படுத்தப்பட்ட பிரிவிற்கு (Backward Caste) ஒதுக்கப்பட்ட இடங்கள் -915 (பொதுப்பிரிவில் எடுத்த இடங்களுடன் பிற்படுத்தப்பட்ட பிரிவிற்கு கிடைத்த இடங்கள் -1594)

d) மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவிற்கு (Most Backward Caste) ஒதுக்கப்பட்ட இடங்கள் -610 (பொதுப்பிரிவில் எடுத்த இடங்களுடன் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவிற்கு கிடைத்த இடங்கள் -720)

e) பட்டியலின பிரிவிற்கு (Scheduled caste) ஒதுக்கப்பட்ட இடங்கள் -579 (பொதுப் பிரிவில் எடுத்த இடங்களுடன் தாழ்த்தப்பட்ட பிரிவிற்கு கிடைத்த இடங்கள் -600)

f) சென்ற வருடம் சமூக வாரியாக தமிழ்நாட்டில் கிடைக்கப்பட்ட MBBS இடங்கள்

(i) FC-136

(ii) BC-1594

(iii) MBC-720

(iv) SC/ST-600

நீட் வந்ததால் எந்த சமூகம் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் தெளிவாக தெரிந்து கொள்ளலாம். உண்மை இவ்வாறு இருக்க ஒரு குறிப்பிட்ட சமூகத்தை குறி வைத்து பொய் பிரச்சாரம் செய்து நவீன தீண்டாமை செய்வது ஏன்? (நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவன். இதை இங்கு நான் கூறாவிட்டால் என் சாதி வேறாக பார்க்கப்படும் என்பதால் குறிப்பிடுகிறேன்)

13. அடுத்த விவாதம் நீட் வந்ததால் பணக்காரர்களுக்கு மட்டும் சீட் கிடைக்கிறது என்பது. நீட் வருவதற்கு முன்னாலும் தனியார் பள்ளிகளில் படித்த பணக்கார மாணவர்கள்தான் சீட் வாங்கினர். நீட்டை ஒழிப்பதன் மூலம் அதை சரிசெய்ய முடியமா? அதை சரிசெய்ய வேண்டுமென்றால் ஒரு சமூகத்தில் மீண்டும் மீண்டும் இடஒதுக்கீட்டின் மூலம் பலனடைந்து வரும் பணக்காரர்களை விடுத்து பலனடையாத மக்களுக்கு இடஒதுக்கீடு சென்று சேருமாறு இடஒதுக்கீட்டு முறையை மாற்ற வேண்டுமா? அல்லது நீட் தேர்வை ஒழிக்க வேண்டுமா?

14. அடுத்ததாக நாங்கள் ஏற்கனவே முன்னேறிவிட்டோம், எங்கள் GER Ratio 49% உள்ளது, உத்திரபிரதேசத்தில் 20% தான் உள்ளது, எனவே எங்களுக்கெல்லாம் நீட் போன்ற தேர்வுகள் தேவையில்லை என்கிறார்கள் சிலர். அனைவரையும் படிக்காமலே pass செய்வித்தால் ஒரு பத்திரிக்கை வெளியிட்ட பொய் செய்தியை போல் GER Ratio வில் நாம் அமெரிக்காவை கூட மீறலாம். ஆனால் பலன் என்ன? மேலும் ஒரு தகவல் தமிழ்நாட்டில் 49% GER Ratio உடன் உயர் கல்வி படிக்கும் மக்கள் 3.5 கோடி (total population-7cr) என்றால் உத்திரபிரதேசத்தில் 20% GER ratio உடன் உயர் கல்வி படிக்கும் மக்களின் எண்ணிக்கை 4.6 கோடி (total population-23cr). நம்மை விட அதிகம் மக்கள் எண்ணிக்கையில் உயர்கல்வி படிக்கிறார்கள். அவர்களும் நம்முடன் போட்டிக்கு வருவார்கள். எனவே யாரையும் குறைவாக மதிப்பிட வேண்டாம்.

15. GER Ratio பெருமை பேசுவதை விடுத்தது 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 93% மாணவர்களில் 50% மாணவர்கள் ஏன் Just pass செய்தார்கள் என்று ஆராய்வது பயனளிக்குமா? அல்லது நாங்கள் 93% pass என்று பெருமை பேசுவது பயனளிக்குமா? இதுவரையில் நம் பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் என்ன குறை என்று யாராவது விவாதித்திருக்கிறோமா? அதை மேம்படுத்தவேண்டும் என்று போராடியிருக்கிறோமா? முதலில் நம் கல்வித்தரத்தை உயர்த்துவோம். நம் மாணவர்களுக்கு அபரிதமான ஆற்றல் உள்ளது. அவர்களுக்கு முறையான கல்வி கொடுத்தால் அவர்கள் நீட் என்ன எந்த தேர்வையும் ஊதி தள்ளிவிடுவார்கள்

16. நீட் தேர்வு வருவதற்கு முன்னால் தமிழ்நாடு மருத்துவ கல்லூரிகளில் 50% முதலாண்டு **MBBS** மாணவர்கள் **Human Physiology, Anatomy and Biochemistry** என்ற மூன்று பாடங்களில் ஏன் தேர்ச்சி

பெறவில்லை?? நீட் தேர்வு மூலம் சென்ற மாணவர்கள் 2017ம் ஆண்டிலிருந்து எப்படி 80% க்கும் மேல் அந்த மூன்று படங்களில் தேர்ச்சி பெறுகிறார்கள்?

17. நம் கல்விமுறை மனப்பாடம் செய்யும் கல்விமுறை என்று பட்டவர்த்தனமாக தெரியும் பொழுது அதைவைத்து மருத்துவ மாணவர்களை தேர்தெடுப்பது சரியா? உண்மையான கல்வியாளர்களை வைத்து ஒரு சிறந்த கல்விமுறையை கொண்டுவர வேண்டியது ஒரு அறிவார்ந்த சமூகத்தின் கடமை அல்லவா? நீட் தேர்வுமுறை சரியில்லை என்றால் அதில் உள்ள குறைகளை மத்திய அரசிடம் கூறி அதை மாற்றுவதும் நம் கடமை அல்லவா? கல்வியின் தரம் சம்பந்தமாக இதுவரை எந்த தமிழ்நாட்டு அரசியல்வாதியோ அல்லது போராளிகளோ போராட்டம் நடத்தியுள்ளார்களா? அல்லது அதை பற்றியாவது பேசியுள்ளார்களா? தயவுசெய்து யோசியுங்கள்!

18. நம் மாநில பாடத்திட்ட மாணவர்களுக்கு என்ன பிரச்சனை என்று ஒரு சிறிய ஆராய்ச்சி நடத்தி அதை சரிசெய்யும் முறைகளை என் மாணவர்களிடம் செயல்படுத்தி வெற்றியும் கண்டிருக்கிறேன். அதுபோல் நீட் போன்ற திறனறி தேர்வுகள் ஒரு சிறந்த மருத்துவரை உருவாக்குவதில் எப்படி பங்காற்றுகின்றன என்று சில (Casestudy)களையும் மருத்துவ படிப்பு படிக்கும் என் மாணவர்கள் மூலம் செய்துள்ளேன். இந்த பதிவு மிக நீளமாக இருப்பதால் அந்த தகவல்களை வேறொரு பதிவில் பகிர்கிறேன். இந்த பதிவில் உள்ள அனைத்து விசயங்களும் என் அனுபவத்தில் கிடைத்த தகவல்கள் மற்றும் மனதில் இருந்த கேள்விகள். நான் கொடுத்த எண்களில் மிக சிறிய தவறுகள் இருக்கலாம். இந்த பதிவு உங்களுக்கு நியாயமாக தெரிந்தால் மக்களிடையே தயவுசெய்து பகிருங்கள்.

**Dr. T. பெரியசாமி., M.Tech., Ph.D(IIT Madras)**



## *குஜராத்திலிருந்து 3000 கிலோ ஹெராயின் கடத்தல்.. பின்புலத்தில் இருக்கும் நிழல் மனிதர்கள் யார்?..முரசொலி*

சென்னை: குஜராத் முந்த்ரா துறைமுகம் வழியாக கொண்டு வரப்பட்ட 3000 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் இதன் பின்னால் இருக்கும் நிழல் மனிதர்கள் யார் என சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் முரசொலி கட்டுரையில் தெரிவித்தார்.

இதுகுறித்து முரசொலி நாளிதழுக்கு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் எழுதிய கட்டுரையில், கடந்த வாரம் சென்னை கொட்டிவாக்கத்தில் வசித்து வந்த கோவிந்தராஜூ துர்கா பூரண வைஷாலி என்ற பெண்ணையும், அவரது கணவர் மச்சாவரம் சுதாகர் என்பவரையும் டெல்லியிலிருந்து வருவாய் புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர். இவர்கள் இருவரும் குஜராத் அதானி முந்த்ரா துறைமுகம் வழியாக இரண்டு கன்டெய்னர்களில் 39 மூட்டைகள் டால்கம் பவுடர் இறக்குமதி செய்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் கண்டகாரிலிருந்து ஈரான் பண்டார் அப்பாஸ் துறைமுகம் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து குஜராத்தில் அது இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பரிசோதித்துப் பார்த்த போது அந்தப் பவுடர் 3000 கிலோ உயர்தர ஹெராயின் எனும் போதைமருந்து என தெரியவந்தது. இதன் இந்திய மதிப்பு ரூ 21 ஆயிரம் கோடியாகும். இப்போது பிடிபட்டுள்ள நிறுவனம் கடந்த ஜூன் மாதத்தில் இதே சரக்கை 25 ஆயிரம் கிலோ இறக்குமதி செய்து சந்தைப்படுத்தியுள்ளது.

அதனுடைய மதிப்பு ரூ 1.75 லட்சம் கோடி என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனை இறக்குமதி செய்ய தங்களது இறக்குமதி உரிமத்தைக் கொடுத்து உதவிய சென்னைத் தம்பதியருக்கு ரூ 10 லட்சம் மட்டும் கொடுத்ததாகத் தெரிகிறது. துறைமுகத்தின் முதலாளியான அதானி குழுமம் தங்களுக்கு இதில் எந்தப் பொறுப்பும் சம்பந்தமும் இல்லையென தெரிவித்துள்ளனர். இறக்குமதியாகும் கன்டெய்னர்களில் என்ன இருக்கிறது என்று பார்க்கும் வேலை ஒன்றிய அரசின் சுங்கத் துறை அதிகாரிகளின் பணி. அதையெல்லாம் தாங்கள் கண்காணிப்பதில்லை என சொல்லி ஒதுங்கிக் கொண்டது.

இரு மாதத்திற்கு முன்பு கோலிவுட் திரையுலகைச் சேர்ந்த சில திரைப்பட நட்சத்திரங்கள் நடத்திய ஒரு விருந்து நிகழ்ச்சியில் 30 கிராம் போதைப் பொருள் பிடிபட்டதையும் அது சம்பந்தமாக சில திரைப்பட நட்சத்திரங்களை போதைப் பொருள் தடுப்புப் போலீஸார் மூன்று வாரமாக தொடர்ந்து விசாரித்தனர். அதை நமது தேசிய ஊடகங்கள் 5 வாரங்களாக நேரலையாக ஒளிபரப்பினார்கள். பல கால கட்டங்களில் மோடி அரசின் நடவடிக்கைகளை தங்களது சமூக ஊடகப் பக்கங்களில் விமர்சித்த திரைப்பட நடிகர் நடிகைகளையெல்லாம் விசாரணைக்கு அழைத்து வந்து அதையெல்லாம் தேசிய ஊடகங்கள் மணிக்கணக்காக பிரைம் டைமில் காண்பித்து வியாபாரமாக்கினர். 30 கிராமுக்கு நமது ஊடகங்கள் தந்த நேரத்தில் நூற்றில் ஒரு பங்கைக் கூட 30 டன்னுக்குத் தரவில்லை.

300 கிலோ குட்கா வந்தால் கூட நம்மூர் போலீஸார் மடக்கி பிடித்துவிடுகிறார்கள். அப்படியிருக்கும் போது 30 டன் ஹெராயின் முந்த்ராவிலிருந்து மூன்று மாநிலங்கள் தாண்டி 1300 கி.மீட்டர்கள் பெரிய கன்டெய்னர்களில் அதுவும் தேசிய நெடுஞ்சாலைகளில் 30 சோதனைச் சாவடிகளைத் தாண்டி பயணிக்கிறது என்றால் அக்கடத்தல் கும்பல் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதை யாரும் யூகித்து விடலாம்.

தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் ஒரு ஆற்றின் குறுக்கே கிராமத்துப் பெண்கள் கட்டிய தடுப்பணையை பற்றி தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் நமது பிரதமர் அவரது சொந்த மாநிலத்தில் நடந்த இந்த பெரும் போதை மருந்துக் கடத்தலை பற்றி தெரியாதா என்ன?

இந்தியாவின் எந்த மூலையிலும் எது நடந்தாலும் தெரிந்து கொள்ளும் சக்தி கொண்ட உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கும் இதுகுறித்து தெரியாதா? ஏன் இருவருமே இதை பற்றி எதுவுமே பேசவில்லை என எந்த ஊடகத்தினரும் கேட்டு விட முடியுமா? இக்கடத்தலுக்குப் பின்னால் உள்ள நிழல் மனிதர்கள் யார், இவர்களுக்கு ஏதேனும் அரசியல் தொடர்பு உண்டா? ஒரு தனியார் துறைமுகத்தில் ஆறு மாதத்தில் இரண்டு லட்சம் கோடிக்கு போதைப் பொருள் கடத்தப்படுகிறது என்றால் நாடு முழுவதும் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டிருக்கும் மற்ற தனியார் துறைமுகங்களுக்கு எத்தனை லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான போதை பொருட்கள் வந்திருக்கும்?

இப்போதை பொருள் விற்பனை மூலம் வரும் லட்சக்கணக்கான கோடி ரூபாய்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் தாறுமாறாக எகிறும் இந்திய பங்கு சந்தை வியாபாரத்திற்கும் தொடர்புண்டா? அரசியல் கட்திகளுக்கு தேர்தல் நிதியாக தரப்பிடுகிற தேர்தல் பாண்ட் பத்திரங்களுக்கும் இக்கடத்தல் பேர் வழிகளுக்கும் சம்பந்தம் உண்டா, இப்படிப்பட்ட கடத்தல்காரர்கள் ஒன்றிணைந்து தங்களுக்குச் சாதகமான கட்சியை ஆட்சியில் அமர்த்த முடிவெடுத்தால் அந்த கட்சியின் பணபலத்தை தேர்தல் களத்தில் மற்ற கட்சிகள் எப்படி எதிர்கொள்ளும்? இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலம் என்னவாகும்? போதை பொருள் கடத்த முடிந்த இந்த கும்பலுக்கு ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் கடத்தி வர முடியாதா, அப்படி செய்தால் தேசத்தின் பாதுகாப்பு என்ன ஆகும்? என தனது கட்டுரையில் பீட்டர் அல்போன்ஸ் குறிப்பிட்டுள்ளார்

*************************************************************************************************************************************************

**<u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>**

## <u>மகாத்மா காந்திஜியின் எளிய உடை</u>

மதுரைக்கு வந்தபின் தான், (21-09-1921) காந்திஜி நமது நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் ஆறு அங்குல அகலமும் சில அடி நீளமும் கொண்ட கோவணம் உடுத்தி அரை நிர்வாணத்தில் இருக்கும் கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதைக்கண்டார். சூட்டும் பூட்டும் கோட்டும் அணிந்திருந்த அவர் உடனேயே அரையாடைக்கு மாறினார். கச்சம் பாயச்சிக் கட்டிய முழங்கால் வரையிலான அரை வேட்டியும், மேலே போட்திய துண்டுமாக காட்சியளித்தார். அவரது நண்பர்கள் பழைய உடைக்கு மாறச்சொல்லிக் கேட்டுக்கொண்ட போதிலும் அவர் ஏற்கவில்லை.

1931 ம் ஆண்டு லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் தன்னை சந்திக்க வருமாறு இங்கிலாந்தின் சக்கரவர்த்தி காந்திஜிக்கு அழைப்பு விடுத்தார். அப்போது நல்ல குளிர் காலம்: இருப்பினும் காந்திஜி தனது வழக்கமான அரையாடையுடன் சென்றார். அவர் அரண்மனைக்குள் நுழையும் போது அவரைப் பத்திரையாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு நிருபர் காந்திஜியிடம் கேட்டார், “இப்படியேவா சக்கரவர்த்தியைச் சந்திக்கப் போகிறீர்கள்? அந்த சந்திப்புக்கு ஏற்ற உடை இதுதானா?”

காந்திஜி புன்னகைத்தார்: ‘உடையைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். நம் எல்லோருக்கும் சேர்த்து தான் அரசர் ஏராளமான உடை அணிந்த்திருக்கிறாரே!” இது போன்ற ஒற்றை வரி நகைச்சுவைத் துணுக்குகளுக்குப் பெயர் பெற்றவர் நமது காந்திஜி. ஒரு முறை ஒரு நிருபர் காந்திஜியிடம் “நீங்கள் ஏன் ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்கிறீர்கள்?” என்று கேட்டார். அதற்கு காந்திஜி சொன்ன பதில், ”நான்காம் வகுப்பு என்று ஒன்றில்லையே!”

காந்திஜியின் அரையாடையை “ஆன்மீகத்தின் அடையாளம்” என்று போப்பாணடவர் பாராட்டினார். ஆனால் சிலர் அதே அரையாடையை “ஆரை நிர்வாண பக்கிரி!” என்றும் எள்ளி நகையாடினர்.

**“அரசியல் ஆளைப்பார்க்கும்: ஆன்மீகம் உள்ளே பார்க்கும்.**

**அதுதான் ஆன்மீகத்துக்கும் அரசியலுக்கும் உள்ள வித்தியாசம்:**

# பித்தலாட்டத்திற்கு மறு பெயர் தானோ பி.எம்.கேர்ஸ் பண்ட்... (PM CARE FUND)?

சட்டத்திற்கு அப்பாற்பட்டு செயல்பட சட்டபூர்வமாக தங்களுக்கு கிடைத்த அதிகாரத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு பெயர் தான் பி.எம்.கேர்ஸ் பண்ட்!

"அரசாங்கத்தின் அதிகாரம் எங்களுக்கு தேவை! ஆனால், அரசின் சட்டங்கள், கட்டுப்பாடுகள் எங்களுக்கு தேவையற்றது! எங்களை தணிக்கைதுறை கட்டுப்படுத்தக் கூடாது. தகவல் அறியும் உரிமை சட்டம் கேள்வி கேட்கக் கூடாது! இப்படி தானடித்த மூப்பாக செயல்படுவதற்கான ஒன்றை உருவாக்கி கல்லா கட்டத்தானே பதவிக்கே வந்தோம்." என்பவர்களிடம் என்ன பேச முடியும்? நாட்டுத் தலைமையே இந்த லட்சணம் என்றால், அப்புறம் தனி முதலாளிகளை யார் கேட்பது..?

கொரோனா தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கட்டுப்பாட்டுக்காக தொடங்கப்பட்ட பி.எம். கேர்ஸ் நிதி அறக்கட்டளை தொடர்பாக நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. பிரதம மந்திரி பெயரில் தொடங்கப்பட்டு, அரசு இலச்சினை, அரசு இணையத்தளம், அரசு சமூகத்தளங்களில் விளம்பரம் என அரசின் சர்வ அதிகாரங்களையும் பயன்படுத்திக் கொண்டு செயல்படும் அமைப்பு மக்களிடம் நிதி கேட்குமாம். ஆனால், மக்கள் அதனிடம் கணக்கு கேட்கக் கூடாதாம்!

பக்கா அரசாங்க அமைப்பு போலவே செயல்பட்டு வரும் இந்த நிதி அறக்கட்டளைக்கு பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த நிதி அறக்கட்டளைக்கு இது வரை பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை, செலவு விவரம் உள்ளிட்டவைகளை வெளியிடுமாறு ஆர்.டி.ஐ மூலம் தகவல் கோரப்பட்டது. அப்போது இது தனியார் அறக்கட்டளை, அரசுக்கு சொந்தமானது அல்ல'' என்ற காரணம் கூறி ஆர்.டி.ஐ தகவல் தர மறுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, "பிஎம் கேர்ஸ் நிதியை பொதுச் சொத்தாக அறிவிக்க வேண்டும், பிஎம் கேர்ஸ் நிதியைத் தணிக்கை செய்து அவ்வப்போது அறிக்கை வெளியிட வேண்டும். பிஎம் கேர்ஸ்க்கு வழங்கப்பட நன்கொடைகள் மற்றும் அதன் விவரங்களை வெளியிட வேண்டும்" என டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது!






இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது பிரதமர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்ட தகவலானது ,"பிஎம் கேர்ஸில் உள்ள நிதி அரசாங்கத்தின் நிதி அல்ல. பிஎம் கேர்ஸ் நிதி அறக்கட்டளை, அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டு உருவாக்கப்படவில்லை. எந்தச் சட்டத்தாலும் உருவாக்கப்படவில்லை. மத்திய அரசின் எந்த விவகாரத்துக்கும், செயலிலும் ஒரு பகுதியாக பிஎம் கேர்ஸ் நிதி இல்லை. மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கையால் தணிக்க செய்யவும் முடியாது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெற பிஎம் கேர்ஸ் நிதி பொது அமைப்பு அல்ல," என்று கூறப்பட்டுள்ளது.

"சட்டத்தின் மூலமாக இது கொண்டுவரப்பட்டிருந்தால், இது சி ஏ ஜி தணிக்கைக்கு உட்பட்டிருக்கும். அதனால் தான் சட்டத்தைப் புறக்கணித்துவிட்டு இது உருவாக்கப்பட்டுள்ளது", என்பது ஷாஷ்வத் என்பவரின் வாதம்.

"பி எம் கேர்ஸ் நிதி, அரசியலமைப்பிற்கு முரணானது என்று அறிவிக்க வேண்டும், என்பது மட்டுமல்ல, பிஎம்என்ஆர்எஃப்-ம் அரசியலமைப்பிற்கு விரோதமானது" என்று அறிவிக்கக் கோரியும் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் ஷாஷ்வத் என்பவர். மேலும் அவர், "இப்படி ஒரு அறக்கட்டளையை உருவாக்கவே முடியாது. சட்டமியற்றியே இதை உருவாக்க முடியும். ஆனால், இது சட்டப்படியன்றி, அரசால் தன்னிச்சையாக உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் இது சட்ட விரோதமானது" என்று கூறுகிறார்.

கொரானோ எனும் கொடும் துயரத்தை பயன்படுத்தி தன்னிச்சையாக பணம் ஈட்டும் அதிகாரத்தை- அதுவும் அரசுத்துறையிலேயே பணம் ஈட்டும் அதிகாரத்தை - எந்த ஒரு தனி நபருக்கும் அரசியல்சட்டம் வழங்கவில்லை.

கொரானா காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் பல கீ,மீ நடந்து பசி,பட்டினியோடு சுருண்டு விழுந்து இறந்தனர். இந்த நிதி அவர்களை காப்பாற்றப் பயன்படவில்லை..! இந்த பி.எம்.கேர்ஸ் நிதி மார்ச்- 27, 2020ல் தொடங்கப்பட்டது! தொடங்கப்பட்ட ஐந்தே நாளில் இதற்கு 3,076.62 கோடி நிதி குவிந்துவிட்டது .ஏகப்பட்ட தனியார் நிறுவனங்கள் இவற்றை தந்தன. ஆன போதிலும் அரசுத் துறை நிறுவனங்களையும், அரசு ஊழியர்களையும் தொடர்ந்து நிர்பந்தித்து பணம் வசூலித்தனர். மத்திய அரசின் 50துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள், பி.எம்.கேர்ஸ் நிதியத்துக்கு ரூ.157.23 கோடி வழங்கிஉள்ளனர். இதில் ரயில்வே ஊழியர்கள் மட்டும் அதிகபட்சமாக 93 சதவீதம், அதாவது ரூ.146.72 கோடி நன்கொடை அளித்துள்ளனர். இந்த தொகைமுழுவதும் ஊழியர்கள், தங்கள்ஊதியத்தில் இருந்தே வழங்கி உள்ளனர்!

பி.எம்.கேர்ஸ் நிதியத்துக்கு 38 பொதுத் துறை நிறுவனங்கள், சமூக பொறுப்பு (சிஎஸ்ஆர்) திட்டத்தின்படி ரூ.2,105 கோடி வழங்கி உள்ளன. 7 பொதுத் துறை வங்கிகள், மற்ற நிதி நிறுவனங்கள் ரூ.204.75 கோடி, மத்திய கல்வி நிறுவனங்கள் ரூ.21.81 கோடி நிதியுதவி அளித்துள்ளன. இந்நிறுவனங்களின் ஊழியர்களும் தங்கள் ஊதியத்தில் இருந்தே நன்கொடையை வழங்கி உள்ளனர் என்று தகவல் அறியும்உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பதிலில் தெரிய வந்துள்ளது.

இதேபோல் மத்திய சுற்றுச்சூழல் துறை மற்றும் வனத் துறை ஊழியர்கள் ரூ.1.14 கோடி, வெளியுறவுத் துறை ஊழியர்கள் ரூ.43.26 லட்சம், பாதுகாப்புத் துறை ஊழியர்கள் ரூ.26.20 லட்சம், சுகாதாரத் துறை ஊழியர்கள் ரூ.18.51 லட்சம் வழங்கி உள்ளனர். எனினும், மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பிரதமர் அலுவலகம், அஞ்சல் துறை அலுவலகம் போன்ற சில முக்கிய துறைகள் எவ்வளவு நன்கொடை வழங்கி உள்ளன என்ற விவரங்களை அளிக்கவில்லை. கொரோனாவை எதிர்த்துப் போராட, 'பிஎம் கேர்ஸ்' நிதிக்கு நன்கொடை அளிக்குமாறு கடந்த மார்ச் 27 ஆம் தேதி மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டது. அறிவிப்பு வெளியான 52 நாட்களில் ரூ. 9 ஆயிரத்து 677 கோடியே 90 லட்சம் வசூலானதாக தெரிய வந்துள்ளது.

இந்த பி.எம்.கேர்ஸ் நிதியில் இருந்து மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட வெண்டிலேட்டர்களில் பல செயல்படவில்லை எனக் கூறப்பட்டது நினைவிருக்கலாம்! காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி பல முறை பி.எம்.கேர்ஸ் நிதி தொடர்பான கேள்விகளை எழுப்பி உள்ளார்.

பி.எம் கேர்ஸ் நிதியத்திற்கு சீனாவிடமிருந்து பணம் பெறப்பட்டுள்ளதை காங்கிரஸ் தலைவர் **அபிஷேக்சிங்வி** கண்டித்துள்ளார். சீனாவின் ஹுவேய் நிறுவனம் ரூ.7 கோடியும், 'டிக் டாக்'

ஆப் உரிமையாளரின் நிறுவனம் ரூ.30 கோடி வழங்கியுள்ளது. 38 சதவீத சீன முதலீடை கொண்டுள்ள பேடிஎம் நிறுவனம் ரூ.100 கோடியும், ஜியோமி நிறுவனம் ரூ.15 கோடியும், ஓப்போ நிறுவனம் ரூ.1 கோடியும் பி.எம் கேர்சுக்கு வழங்கியுள்ளது. இப்படி பெறப்படும் நிதி எவ்வாறு கையாளப்படுகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. வெளிப்படையின்றி இருக்கும் பி.எம் கேர்ஸ் நிதியை பிரதமர் மட்டும் தான் கையாள்வதாக தெரிகிறது.''என அவர் கூறியுள்ளது கவனத்திற்குரியதாகும்!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் **சீத்தாராம் யெச்சூரி** ட்விட்டரில், 2020 ஏப்ரல் மாதம் ஒன்றிய அரசு அறிவிப்பில் 2021 மார்ச் மாதம் வரை அரசு ஊழியர்கள் தங்கள் ஊதியத்தில் ஒரு நாள் ஊதியத்தை நன்கொடையாக வழங்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தது. பிஎம் கேர்ஸ் நிதி அர சாங்கத்துக்குச் சொந்தமானது அல்ல என்றால், எதற்காக அந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. பிஎம் கேர்ஸ் கொள்ளையை நிறுத்துங்கள். இந்த மோசடி, கொள்ளை நிறுத்தப்பட வேண்டும், அதில் உள்ள நிதி அனைத்தும் தணிக்கை செய்யப் பட்டு கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்'' என பதிவிட்டுள்ளார்.

மேலும் அவர், ''ஜனநாயகத்தை தடம்புரள வைக்க தவறாக பயன்படுத்த அனுமதிக்க கூடாது! பி.எம்.கேர்ஸ். நிதி பீகார் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சாதகமாக செலவு செய்ய வாய்ப்பிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. எனவே, இந்த தனியார் நிதி வெளிப்படைதன்மை உடையதாக ஆக்கப்பட வேண்டும். மாநிலங்களுக்கு பிரித்து தரப்பட வேண்டும்.தேர்தல் பத்திரங்களை போல நமது ஜனநாயகத்தை தடம்புரள வைக்க தவறாக பயன்படுத்த அனுமதிக்க கூடாது.'' என வலியுறுத்தி உள்ளார்.

நமக்கு ஒரு சந்தேகம் என்னவென்றால், இந்த நிதியை மோடியும், அவரது கூட்டாளிகளும், ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்துத்துவ இயக்கங்களுக்கு எடுத்துக் கொடுக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் உள்ளது? மக்களுக்கு தருவதற்குத் தான் பெறுகிறோம் என்றால், அதை மறைக்க வேண்டிய அவசியம் ஏன் வருகிறது..?-

***சாவித்திரி கண்ணன்*** **(ARAM Online)**
September 26, 2021

***************************************************************************************************************************************************

## இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:

திரு **N** சுப்ரமணியன், தலைவர் **: 9444274352**
திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

***********************************************************************************

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

**ஊழல் எதிர்ப்பு இயக்கம் , சென்னை -23**
**நிர்வாகக் குழுக்கூட்டம் (05-10-2021)**

அமைச்சர் செந்தில் பாலாஜி மீதுள்ள வழக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக ரத்து செய்யப்படுவது நீதியையே கேள்விக்குரியாக்குகிறது. இது தினசரி பத்திரிக்கைகளில் வந்துள்ளது. தலைவர் மடலிலும் எழுதப்பட்டுள்ளது. இதை நம் இயக்கம் தடுக்க சட்டபோராட்டம் நடத்த வேண்டும். எனவே, இவ்வழக்கில் நம் இயக்கம் ஒரு பிரதிவாதியாக சேர்த்துக் கொள்ளவும், பலவகையிலும் சட்ட நடவடிக்கை எடுக்கவும், முடிவு எடுக்கவும் பொது செயலருக்கு அதிகாரம் வழங்க உறுப்பினர்களின் ஒப்புதல், போன் (கோரானாவால்) மூலம் கேட்கப்படுகிறது. உறுப்பினர்கள் தங்கள் கருத்தை பொது செயலாளரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முடிவு whatsappல் உடனே போடப்படும்

**V கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**
**05-10-2021**

---

திரு மனோகர், (மக்கள் தொடர்பு செயலாளர்) அவர்களின் கருத்து
Ok

---

மற்ற செயலாளர்கள் திரு தனசேகரன் (நிதி), திரு கோவிந்தசாமி ((பதிப்பு), ,திரு சாந்தகுமார் (கலை) ஆகியோரும் தொலைபெசி மூலம் சம்மதம் தெரிவித்தனர்.

---

**திரு ஐயப்பன், (பயிற்சி செயலாளர்) அவர்களின் கருத்து**

நிர்வாகக்குழு கூட்டத்தில் எடுக்கும் எந்த ஒரு முடிவுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறேன் .
இப்படிக்கு. வெ அய்யப்பன் ஊழல் எதிர்ப்பு இயக்கம் பயிற்சி செயலாளர்

---

**ஊழல் எதிர்ப்பு இயக்கம் , சென்னை -23**
**நிர்வாகக் குழுக்கூட்டம்**

இன்று தொலைபேசி மூலமாகவும், WhatsApp வழியாகவும் அனைத்து நிர்வாக உறுப்பினர்களிடமும் கருத்துகள் கேட்கப்பட்டன. அனைவரும் ஒப்புதல் அளித்துள்ளார்கள். எனவே கீழக்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

"தற்போதைய மின்வாரிய அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி மற்றும் பலர் மீது போடப்பட்ட ஊழல் அல்லது குற்ற வழக்குகள், (போக்குவரத்து கழகங்களில் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பணிநியமனம் செய்ததில் லஞ்சம் வாங்கியதற்காக போடப்பட்டவை) ரத்து செய்ததையும்/ இனி ரத்து செய்வதையும் எதிர்த்து நம் இயக்கம் வழக்காடும் பொருட்டு சகலவிதமான சட்ட நடவடிக்கைகளையும் எடுக்க பொதுசெயலாளருக்கு முழு அதிகாரம் வழங்குவதென ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது. தலைவருடன் கலந்து பேச முடிவெடுத்து விரைந்து உடன் நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்ட கேட்டுக் கொள்ளப்படுகிறது."

**V கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**
**05-10-2021**

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# DVAC seizes ₹1.20L from office of additional district fire officer

TIMES NEWS NETWORK

**Tiruvarur:** Sleuths from the directorate of vigilance and anti-corruption (DVAC) have seized Rs 1.20 lakh from the office of an additional district fire officer in Tiruvarur on Monday. Based on various complaints stating that the officials from the fire and rescue services department, located at Netaji Road, have been indulging in irregularities in providing fire safety certificates for commercial establishments and licence to fireworks outlets, sleuths from the DVAC conducted a surprise raid at the office on Monday.

The raid was carried out by a team headed by deputy superintendent of police Nanthagopal and inspector Tamilarasi. During the check, they found unaccounted cash amounting to Rs 1.20 lakh at the office of B Murugesan, additional district fire officer, fire and rescue services, Tiruvarur.

Officials seized the cash and registered a case. Further inquiries were on, DVAC sources said.

# Graft: DVAC surprise raids net ₹31.5L

TIMES NEWS NETWORK

**Chennai:** Government officials and touts continue to collect bribes for what should be routine services provided to citizens for free. This was evident from the seizure of ₹31.45 lakh unaccounted cash by Directorate of Vigilance and Anti-Corruption (DVAC) in surprise checks at 38 offices last week.

Registration offices and Regional Transport offices (RTOs) continue to be places where maximum cash bribes were unearthed by DVAC officials. TASMAC has also emerged as a hotbed for collection of additional money from customers, which is also unaccounted money. For instance, ₹2.23 lakh was seized from the Sriperumbudur RTO, ₹2.8 lakh from a town planning office in Tiruvannamalai and ₹3.31 lakh from the rural development department's office in Sivagangai.



**UNACCOUNTED:** Some of the cash seized by the DVAC

These are government offices which deal with a high volume of citizens who conduct cash transactions everyday.

Residents and activists point out that for even the simplest of government approvals, certificates or facilities, bribes must be paid. This can be a ₹2,000 for availing a community certificate, to a few lakhs for obtaining a building approval plan.

"Bribes are a norm even if papers are in order. If money is not paid, the approval will be delayed," is the refrain in most government offices in Chennai and state.

Mohammed Salihu, an activist from Kayalpatnam in Tuticorin district said a major reason for bribery is poor awareness of rules. "For instance, people don't know how to apply for CRZ permission if building houses near the coast. Officials collect a bribe to turn a blind eye," he said.

Rules should be practical and easy to follow and government departments should create more awareness about them so that corruption can be curbed, Salihu said.

Chennai-based activist Jayaram Venkatesan said that building plan approval has emerged as a big corruption exercise, as bribes are being collected on a per square foot basis.

Jayaram said the right to services act should be implemented so that people who are not willing to pay a bribe would still be able to access services in a time-bound manner. "Other methods to curb corruption would be increased e-governance, shuffling officials frequently and also training them in ethics and values right from the start," he said.

# DVAC unearths ₹1.7crore scam in procurement of RO plants for Aavin

## Officials Floated Fictitious Firms With Traders Known To Them



**An FIR was filed last week by the Vellore detachment of DVAC in which the then general manager M Prabakaran and assistant general manager KS Muraliprasad of VTDCMPU have been named as first and second accused**

TIMES NEWS NETWORK

**Chennai:** Directorate of Vigilance and Anti-corruption (DVAC) has dug out a massive ₹1.7 crore scam in the procurement of substandard reverse osmosis (RO) plants used for milk chilling centres in Aavin's Vellore and Tiruvannamalai wing.

An FIR was filed last week by the Vellore detachment of DVAC in which the then general manager M Prabakaran and assistant general manager KS Muraliprasad, of the Vellore and Tiruvannamalai district co-operative milk producers union ltd (VTDCMPU) have been named as first and second accused.

The agency has found that the general manager and assistant general manager of Vellore and Tiruvannamalai District Co-operative Milk Producers Union created fictitious companies with the help of local traders known to them, fixed the tender process for procurement of the RO plants and threatened tender committee members to award the tender to these fictitious companies. During an internal audit the RO plants were found to be of sub-standard quality as well.

Four other private individuals who allegedly aided the officials in the procurement have also been named in the FIR.

In 2017 and 18, VTDCMPU decided to purchase 40 RO water plants for milk chilling after getting permission from the headquarters in Chennai.

DVAC said the two accused officials threatened subordinates and obtained quotations from firms close to themselves. They then created paperwork as if quotations were given by companies, which were fake.

Purchase orders were issued to companies close to the two officials, DVAC said and a trail was created as if they had given the lowest quotations. However, these prices itself were higher than the market rate; later payment amounting to ₹1.69 crore was also made to these companies.

An internal audit found that the funds were not utilised properly; DVAC said the unbranded RO plants procured were not in working condition and found to be defective. A case under sections for corruption, cheating and forgery has been booked against the accused.

# வில்லங்க சான்றுக்கு கமிஷன் பதிவுத்துறை மீது மக்கள் புகார்

சென்னை, ஆக. 5–

'ஆன்லைன்' முறையில் வில்லங்க சான்று கோரி விண்ணப்பிப்போரிடம், சார் – பதிவக பணியாளர்கள், கமிஷன் கேட்டு மறைமுகமாக நிர்ப்பந்தம் செய்வதாக புகார் எழுந்து உள்ளது.

தமிழகத்தில் சொத்து வாங்குவோர், அது தொடர்பான முந்தைய பரிமாற்றங்களை அறிய, வில்லங்க சான்று பெறுவது அவசியம். பொதுமக்கள் நேரடியாக சார் – பதிவாளர் அலுவலகங்களுக்கு சென்றால், தரகர்கள் ஆதிக்கத்தால் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து, பொது மக்கள் ஆன்லைன் முறையில் கட்டணம் செலுத்தி, விண்ணப்பிக்கும் நடைமுறையை பதிவுத்துறை அறிமுகம் செய்தது.

பொதுமக்கள் வீட்டில் இருந்தபடியே விண்ணப்பித்தால், மூன்று நாட்களில், அவர்களின் 'இ – மெயில்' முகவரிக்கு வில்லங்க சான்று அனுப்பப்படும்.

சமீபகாலமாக ஆன்லைன் முறையில் விண்ணப்பிப்போருக்கு, வில்லங்கசான்று வருவதில்லை.

**கூடுதல் வசூல்**

இது குறித்து, பொது மக்கள் கூறியதாவது:

மக்கள் நலனுக்காக பதிவுத்துறை, இது போன்ற புதிய வசதிகளை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால், சார் – பதிவாளர் அலுவலக பணியாளர்கள், மக்கள் பெயரில் வரும் வில்லங்க சான்று விண்ணப்பங்களை கிடப்பில் போடுகின்றனர்.

ஆவண எழுத்தர் வாயிலாக வரும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே, உடனடியாக வில்லங்க சான்று வழங்கப்படுகிறது.

இதில், ஒரு சர்வே எண்ணுக்கான வில்லங்க சான்றுக்கு அரசு நிர்ணயித்த 450 ரூபாயுடன், கூடுதலாக 400 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

**ஒரு சர்வே எண்ணுக்கான வில்லங்க சான்றுக்கு அரசு நிர்ணயித்த 450 ரூபாயுடன், கூடுதலாக 400 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**தீர்வு பிறக்கும்**

இதில், சார் – பதிவக பணியாளர்களுக்கு 200 ரூபாய் கமிஷனாக செல்கிறது. இவ்வாறு கமிஷன் வராத விண்ணப்பங்களுக்கு, வில்லங்க சான்று வழங்கப்படுவதில்லை.

இந்த பிரச்னையில், பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, செயலர் ஜோதி நிர்மலாசாமி, ஐ.ஜி., சிவன் அருள் ஆகியோர் கவனம் செலுத்தினால் தீர்வு பிறக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கூட்டுறவு சங்கங்களில் கிளம்பும் ஊழல் பூதங்கள்!



தி.மு.க. ஆட்சி அமைந்ததும் தேர்தலில், தான் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றும் அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அந்த வரிசையில் கூட்டுறவு வங்கிகளில் 5 சவரன் வரை நகைக்கடன் பெற்றவர்களுக்கு, அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார் அவர். சுமார் 5,000 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைக் கடன்கள் இதன் மூலம் தள்ளுபடியாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் அறிவிப்பு வெளியிடப்பட்டு சில வாரங்கள் கடந்தும், கடன் தள்ளுபடி நடக்கவில்லை. என்ன காரணம் என்று விசாரித்தால், கூட்டுறவு வங்கிகளில் தரப்பட்டுள்ள நகைக் கடன்களில் நடந்துள்ள மெகா ஊழல்கள் சரவெடியாக வெடித்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சரவெடிக்கான திரியை பற்ற வைத்தது, தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள குரும்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் நடந்த மோசடிதான்.

இந்தச் சங்கத்தில் வழங்கப்பட்ட கடன்களில் ஏராளமான மோசடிகள் நடந்து இருப்பதாக தகவல் வரவே, அதிகாரிகள் அங்கு ஆய்வுக்குச் சென்றனர். சுமார் ஒரு வாரமாக அவர்களை அங்கு ஆய்வு நடத்தவிடாமல் 'லாக்கர் சாவி இல்லை; செயலாளர் ஊருக்கு சென்றுள்ளார்' என்று காரணம் கூறி தடுத்து வந்தனர். இறுதியாக மேலிட உத்தரவின் பேரில் போலீஸ் உதவியுடன் சென்று ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் அந்த சங்கத்தில் மொத்தம் 548 நகைக்கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாக அங்குள்ள லெட்ஜர்கள் கணக்குச் சொல்லின. ஆனால் 287 கடன்களுக்குரிய நகைகள் மட்டுமே இருந்தன. 261 நகைக் கடன்களுக்கு அடமானம் பெற்ற நகைகள் இல்லை. அந்த நகைகளின் மதிப்பு சுமார் 2 கோடி இருக்கும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. நகை இல்லாமல் கடன் கொடுத்தார்களா அல்லது அடமானம் பெற்ற நகைகள் காணாமல் போயுள்ளனவா என்பது விசாரிக்கப்பட்டு வருகிறது.

அதே போல் பலரிடம் லட்சக் கணக்கான ரூபாய்க்கு டெபாஸிட்டுகளை பெற்று, அதற்கு ரசீதுகளும் வழங்கி உள்ளனர். ஆனால் அந்த டெபாஸிட்டுகள் கணக்குப் புத்தகங்களில் இல்லை. இத்தனைக்கும் மூன்று மாதங்களுக்கு முன்பு அந்த சங்கத்தை ஆய்வு செய்த ஃபீல்ட் ஆஃபீஸர் ஒருவர், 'எல்லாம் சரியாக் இருக்கிறது' என்று நற்சான்றிதழ் வழங்கி இருக்கிறார். தற்போது அவரும், கூட்டுறவு வங்கியின் மேற்பார்வையாளர்கள் இருவரும், வங்கியின் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர் ஆகியோரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். வங்கியின் தலைவர் முருகேசபாண்டியன் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஊழல் வெளியானதைத் தொடர்ந்து அனைத்து கூட்டுறவு வங்கிகளிலும், சங்கங்களிலும் ஆய்வுப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் கீழ்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், ஒரே ஒரு தனிநபருக்கு மட்டுமே 647 நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்றொருவர் 625 கடன்கள் வாங்கி இருக்கிறார். திருப்பத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ஒரே ஆதார் எண்ணை வைத்து, 538 கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில், ஒரு நபர் 300 - க்கும் மேற்பட்ட கடன்களை வாங்கி இருக்கிறார். மதுரை மாவட்டத்திலும் ஒரே நபர் 300-க்கும் மேற்பட்ட கடன்களை வாங்கி இருக்கிறார்.

இப்படி தோண்ட, தோண்ட பூதம் கிளம்பிக் கொண்டே இருக்கிறது. தற்போது வேளாண் கடன்களிலும் இதே போன்ற மோசடிகள் நடந்திருப்பது வெளியே வரத் துவங்கியுள்ளது. விவசாயமே நடக்காத கட்டாந்தரை நிலங்களுக்கும், மோசடியாக வேளாண் கடன் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து தமிழகம் முழுவதும் உள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்களில் சோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் தான் எத்தனை ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ளது என்பதும், அதில் யார் யார் சிக்குவார்கள் என்பதும் தெரியவரும்.

– எஸ்.ஜே.இதயா


துக்ளக் - 13.10.2021 | 7

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

## நேர்மை நெறி- அக்டோபர்-2021

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20



எதுக்குங்க நம்ம முன்னோர்கள் போராடி சுதந்திரம் வாங்கினாங்கனு பெரியவர் ஒருத்தர்கிட்ட கேட்டேன்!!!! அவர் சொன்னது !!

1) நம்ம மக்கள் மேல நிறைய வரிகள் விதிச்சாங்க
2) வெளிநாட்டு பொருளெல்லாம் நம்ம நாட்டுல வந்து சந்தைப்படுத்த பார்த்தாங்க
3) நம்ம இயற்கை வளத்த அழிக்க பார்த்தாங்க
4) ஆங்கிலத்த அடுத்த தலைமுறை பிள்ளைகள் மேல திணிக்க பார்த்தாங்க. தாய்மொழி கல்வியே அழிஞ்சிருக்கும்.
5) உள்ளூர் தொழில் மற்றும் விவசாயத்த அழிக்க பார்த்தாங்க
6) வெளிநாட்டு மோகத்த பரப்ப நினைச்சாங்க.
7) நம்ம இயற்கை வைத்தியத்தை அழிச்சு மேல்நாட்டு மருத்துவத்த கொண்டு வர பார்த்தாங்கனு அடுக்கிட்டே போனாரு !!!!

நான் சிரிச்சுட்டே வந்துட்டேன்

Facebook.com/siringa.pls

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச்செயலாளர்: ஜி கோவிந்தசாமி

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 oct 2021;
Due to corona published online)

என்றும், இன்சொல் எண்பதத்தை ஆகுமதி!

பெறுநர்

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,** AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! கொடுக்க விடாதீர்!! இலஞ்சம் வாங்காதீர்! வாங்க விடாதீர்!